# அறிவியல் வளர்ச்சி

| | | |
|---|---|---|
| Name | : | S.Athiban Eswar |
| Class | : | II yr. C.Tech |
| College | : | AGPC |
| | | Roll No. 15724 |

# அன்றாட வாழ்வில் அறிவியல்

### முன்னுரை:

⋆ 21–ம் நூற்றாண்டில் நாம் வாழ்கின்றோம் என்பதை விட, அறிவியல் நூற்றாண்டில் வாழ்கின்றோம் என்று கூறுவதே பொருத்தம் உடையதாகும். 'நாளொரு மேனியும் பெரிதொரு வண்ணமுமாய்' அறிவியல் கண்டுபிடிப்புகள் பெருகி, நம் வாழ்வை வளப்படுத்திக் கொண்டிருக்கின்றன. அறிவியல் இல்லையேல், நம் வாழ்வே இல்லை என்னும் நிலையில் நாம் இருக்கின்றோம்.

### தொலைத்தொடர்பு கருவிகள்:

⋆அறிவியல் தொடர்ந்த ஆக்கங்களும் குறிப்பிட தகுந்தவை தகவல் தொடர்புக் கருவிகளாகும். பல்லாயிரக்கணக்கான கிலோ மீட்டர் தாண்டி வாழும் உறவினரோடும், நண்பர்களோடும் நொடிப்பொழுதில் உரையாடி மகிழத் தொலைபேசி, கைபேசி, மின் அஞ்சல், இணையதளம், பேக்ஸ் முதலானவை பயன்படுகின்றன.

⋆ தொலைக்காட்சிப்பெட்டி, கல்வி வளர்ச்சியில் கணிப்பொறி ஒரு பெரும் புரட்சியை ஏற்படுத்தி இருக்கின்றது. ஒரு நொடிகள் 5 மில்லியன் பெருக்கலைச் செய்து காட்டுகிறது. அது ஆயிரக்கணக்கான பக்கங்களால் அச்சிட வேண்டிய செய்திகளைச் சில செ.மீ. பரப்பில் பதிவு செய்து தேவையான போது எளிதாக்கும் திறனுடையது.

### மருத்துவம்:

⋆ இன்றைய மருத்துவத்தில் நுண்ணுயிர் கண்டுபிடிப்பு நோய் கண்டுபிடிப்பு, மருத்துவ ஆய்வு அறுவை சிகிச்சை முறை போன்றவற்றில் பயன்படும் புதிய புதிய கருவிகளும் முறைகளும் அறிவியலின் ஆக்கங்களே. கருத்தடை, செயற்கைக் கருத்தரித்தல், நோய் தடுப்பு முதலியவற்றில் அறிவியலின் பங்கு அளப்பரியது. செயற்கை இரத்தம் செயற்கை எலும்பு ஆகியவற்றை கண்டயறிய முன்வந்துள்ளது. 'பிளாஸ்டிக் அறுவை சிகிச்சை' என்னும் புதிய முறையை உலகிற்கு வழங்கி உள்ளது.

### போக்குவரத்தில் புதுமைகள்

⋆ மனிதன் கால்கடுக்க நடந்தான். மாட்டு வண்டி, குதிரை வண்டி முதலியவற்றை பயன்படுத்தினான். அது அந்தக் காலம். இன்றோ மிதிவண்டி, ஸ்கூட்டர், மோட்டார் பைக், நாலு சக்கர வண்டி சரக்கு வண்டி, பேருந்து என எளிதாகவும், விரைவாகவும் செல்லப் போக்குவரத்து இயந்திர வண்டிகள் பலப் பெருகி, நம்மை வளப்படுத்திக் கொண்டிருக்கிறது. மேலும் கடல் கடந்து செல்லப் பயன்படும் கப்பல்களையும், விரைந்து செல்லப் பயன்படும் விமானத்தையும் அறிவியல் நமக்குத் தந்த நன்கொடையாகும்.

### உணவு உற்பத்தியில் அறிவியல்

அறிவியல் புரட்சிகளுள் போற்றத்தக்கது வேளாண்மைப் புரட்சி. இயந்திரக் கலப்பைகள், நீர் இறைக்கும் பொறிகள், விதைத் தெளிப்பான்கள், பூச்சிக் கொல்லி மருந்துகள், உரங்கள், கதிர் அடிக்கும் இயந்திரப் பொறிகள் முதலானவை உழவர்களுக்கு நன்மை அளிப்பவையாய் உள்ளன. புதுவகை நெல் விதைகள் மூலம் விளைச்சலைப் பெருக்கவும், மிகுந்த விளைச்சலைத் தரும் காய் கனிகளை உற்பத்தி செய்யவும் பயன்படுவது, அறிவியலே. வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்யக்கூடிய அளவிற்கு நம்மை உயர்த்தி இருப்பது அறிவியல் தான்.



### வாழச் செய்யும் அறிவியல் ஆக்கம்:

⋆ இனி மக்கள் கூட்டத்துக்கு எது பயன்படுமோ அதை மட்டும் கண்டறிதல் வேண்டும். அல்லது பயன்படுத்த வேண்டும் என்னும் நிலை உண்டாகும். பசியினால் மக்கள் வாட்டம் அடைகின்றனர் என்ற நிலை இனி வரக்கூடாது. புற்றுநோயால் இறந்தார் என்ற நிலை இனி வரக்கூடாது. ஏற்றமும் இறக்கமும் உள்ளன என்ற நிலை வரக்கூடாது. எல்லாம் இன்பத்துக்கே! எல்லாம் இனிய வாழ்விற்கே என்ற நிலை ஏற்படவேண்டும். அறிவியல் நிரம்பி ஒழுக்கத்தால் உயர்ந்த சமுதாயம் உருவாக அறிவியல் பயன்பட வேண்டும்.

### முடிவுரை

⋆ அறிவியல் இன்றேல் ஆக்கப் பணிகள் இல்லை, அறிவியல் இன்றேல் வாழ்வே இல்லை; மண்ணையும் அளப்பதும் காப்பதும் அறிவியல் தான். அறிவியலை அழிவுப்பாதையில் கொண்டு செல்லாமல் ஆக்கப் பணிகளுக்குக் கொண்டு செல்வது, இளைய சமுதாயத்தின் கடமையாகும்.